சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்: 25.09.2024

DW1: செந்தில்குமார் த/பெ– நாராயணசுவாமி

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி –</u>**

பி.வா.சா.ஆ.1 காசோலையில் 10.05.2019 ம் தேதி குறிப்பிட்டுள்ளது. பி.வா.சா.ஆ.1 காசோலையில் இந்தியன் ஆயில் நிறுவனத்தின் அதிகாரம் பெற்ற நபர் என்று இருவர் கையொப்பம் செய்துள்ளனர். அந்த இருவரும் மண்டல அதிகாரியின் கீழ் பணிபுரிவர்கள் என்றால் அன்றைய சூழ்நிலையில் உள்ள நபர்கள் கையெழுத்து செய்திருப்பார்கள். அந்த காசோலையில் கையொப்பமிட்ட அதிகாரிகள் நிதிபிரிவின் கீழ் செயல்படுவார்கள். நிதிப்பிரிவிக்கு தனி மேலாளர் உள்ளார். பி.வா.சா.ஆ.1 காலத்தில் நிதிப்பிரிவிக்கு தனி மேலாளராக உஷா என்பவர் இருந்தார். இந்தியன் ஆயில் நிறுவனத்தில் நிதி பிரிவின் ஆலோசனையின் பேரில் செயல்படுவார்கள் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 இணைப்பில் உள்ள கடிதத்தில் சீனியர் மேனேஜர் பைனான்ஸ் என்று குருவம்மாள் என்பவர் கையொப்பம் செய்துள்ளார். அந்த இணைப்பு கடிதத்தில் எந்த மாதத்திற்கான வாடகை என்ற விபரம் உள்ளதா என்றால் குறிப்பிடப்படவில்லை, ஆனால் மே மாதத்திற்குரியது, ஆனால் மே மாதத்திற்கு என்று குறிப்பிடப்படவில்லை. அதில் 10.05.2019 ம் தேதியிட்ட காசோலை இணைக்கப்பட்டுள்ளதாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ல் PR SakthivelRaja Land Owner YES PEE KAY Agency என்ற பெயரில் வழங்கப்பட்டுள்ளது. அந்த சமயத்தில் நான் மதுரை அலுவலக பணியில் இல்லை என்றால் சரிதான். PR Sakthivel Raja Land

Owner YES PEE KAY Agency என்ற பெயரில் காசோலை ஏன் அனுப்பப்பட்டது என்பதற்கான விபரம் இணைப்பு கடிதத்தில் கையொப்பமிட்ட குருவம்மாள் மற்றும் அந்த காசோலையில் கையொப்பமிட்ட நபர்களை கேட்டால் தான் தெரியும் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.5 முதல் 14 வரையிலான ஆவணங்களில் உள்ள காசோலைகள் அனைத்தும் PR Sakthivel Raja Land Owner YES PEE KAY Agency என்ற பெயரில் தான் உள்ளன என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5 முதல் 14 வரையிலான ஆவணங்களில் உள்ள காசோலைகளில் அதிகாரம் பெற்ற நபர் என்ற இடத்தில் வெவ்வேறு நபர்கள் கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5 முதல் 14 வரையிலான ஆவணங்களில் உள்ள இணைப்பு கடிதத்தில் எந்தெந்த மாதத்திற்கான வாடகை என்ற விபரம் குறிப்பிடப்படவில்லை என்றும், ஆனால் காசோலை பற்றிய விபரமும், தேதியும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் குறிப்பிடப்படவில்லை, ஆனால் அந்தெந்த காசோலை வழங்கிய மாதத்திற்குரியது. பி.வா.சா.ஆ.5 முதல் 10 வரையிலான ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள தேதிகளில் நான் மதுரை அலுவலகத்தில் பணிபுரியவில்லை என்றால் சரிதான். ஆனால் அந்த காசோலை எந்த காலத்திற்காக வழங்கப்பட்டது என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. பிவா.சா.ஆ.14 காசோலை எந்த மாதத்திற்கான காசோலை என்று இணைப்பு கடிதத்தில் விபரமும் இல்லை என்று சொன்னால் குறிப்பிடப்படவில்லை, ஆனால் அந்த காசோலை டிசம்பர், 2020 வாடகைக்குரிய காசோலை. பி.வா.சா.ஆ.14 காலத்தில் நான் மதுரை அலுவலகத்தில் பணிபுரிந்தேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.14 காசோலை எனது தகவலின் பேரில் அனுப்பவில்லை. பி.வா.சா.ஆ.13

காசோலை 04.12.2020 ம் தேதியிட்டதாகும். பி.வா.சா.ஆ.13 காசோலை எந்த மாத வாடகைக்கான காசோலை என்று இணைப்பு கடிதத்தில் விபரம் இல்லை என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.1, 4 முதல் 14 வரையிலான ஆவணங்கள் காலகட்டத்தில் எங்கள் நிதிப்பிரிவில் சீனியர் மேனேஜர் குருவம்மாள் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1, 4 முதல் 14 வரையிலான ஆவணங்களில் குருவம்மாள் வழிகாட்டுதல் பேரில் தான் காசோலைகள் எழுதப்பட்டு அனுப்பப்பட்டது என்றால் இருக்கலாம். எனக்கு அந்த ஆவணங்கள் பற்றி தெரியாது என்று சொன்னால் எந்த அடிப்படையில் அனுப்பினார்கள் என்று எனக்கு தெரியாது. சீனியர் மேனேஜர் குருவம்மாளை விசாரித்தால் தான் காசோலைகள் அனுப்பப்பட்ட விபரமும், இணைப்பு கடிதம் பற்றியும் தெரியவரும் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.1 4 முதல் 14 வரையிலான ஆவணங்கள் நிதிப்பிரிவில் இருந்து வாங்கி வந்து தான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான், நிறுவனத்திற்காக தாக்கல் செய்துள்ளேன். பி.வா.சா.ஆ.1 4 முதல் 14 வரையிலான ஆவணங்களை எப்போது முதன்முதலாக நிதிப்பிரிவில் இருந்து பெற்றேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. சுமார் 1 வருடத்திற்கு முன் இருக்குமா என்றால் தெரியவில்லை. நிதிப்பிரிவிற்கு நான் அலுவல்ரீதியான கடிதம் கொடுத்து அதை பெறவில்லை. பி.வா.சா.ஆ.1 4 முதல் 14 வரையிலான ஆவணங்களை நிதிப்பிரிவில் இருந்து பெற்று தான் நான் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1, 4 முதல் 14 வரையிலான ஆவணங்களில் PR Sakthivel Raja Land Owner YES PEE KAY Agency என்ற பெயரில் வரையப்பட்டதற்கு நிதிப்பிரிவில் எழுத்துமூலமாக நான் கேட்டேனா என்றால் இல்லை. அ.வ.எண். 102/2019

வழக்கில் எங்கள் நிறுவனம் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் ஜனவரி 2019 வரையிலான வாடகை செலுத்திவிட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். ஆனால் எந்தெந்த தேதிகளில் ஜனவரி 2019- வரைக்கான வாடகை செலுத்தப்பட்டது என்பதைப் பற்றி எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அ.வ.எண். 102/2019 வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 10.12.2018 ல் வாதிகள் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார்களா என்றால் தெரியாது. அ.வ.எண். 102/2019 வழக்கில் பிராதில் 10.12.2018 ல் வாதிகள் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாகவும், அ.வ.எண். 194/2022 ல் வழக்கின் பிராதில் அந்த அறிவிப்பிற்கு எங்கள் நிறுவனம் 17.12.2018 பதில் அறிவிப்பு அனுப்பியதாகவும், 23.12.2018 ல் மற்றொரு வழக்கறிஞர் அறிவிப்பு வாதிகள் தரப்பில் அனுப்பப்பட்டதாகவும் சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.15 ல் வாதிகள் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் செப்டம்பர்-நவம்பர் வரை வாடகை பாக்கி இருப்பதாகவும், அதனால் குத்தகையை முடிவுக்கு கொண்டுவருவதாகவும், சுவாதீனத்தை ஒப்படைக்க முடியும் சொல்லப்பட்டிருந்தது என்றால் சரிதான். தற்போது தான் அந்த நோட்டீஸை பார்க்கிறேன்(வாதி தரப்பில் அந்த ஆவணத்தை காட்டி கேட்ட போது). அ.வ.எண்.102/19 என்ற வழக்கின் பிராதில் எங்கள் நிறுவனம் எவ்வளவு வாடகை கொடுத்துள்ளது என்றும், எவ்வளவு வாடகை பாக்கி உள்ளது என்றும் சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அதை குறிப்பிட்டு எங்கள் எதிர்வழக்குரையில் மறுத்து சொல்லவில்லை என்று சொன்னால் எங்கள் எதிர்வழக்குரை பாரா-10 ல் 2019 வரை வாடகை பாக்கி இல்லை என்று சொல்லியுள்ளோம். எந்தெந்த தேதிகளில் எவ்வளவு ரூபாய் வாடகை செலுத்தி இருப்பதாக குறிப்பிட்டு

சொல்லவில்லை என்றால் சரிதான், பொதுவாக ஜனவரி, 2019 வரை வாடகை செலுத்தியுள்ளதாக சொல்லியுள்ளோம். அதற்கு பின்பு உள்ள காலத்திற்கு வாடகை செலுத்தியதாக எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல, பாரா 17 ல் சொல்லியுள்ளோம். எதிர்வழக்குரையில் நாங்கள் பாரா-17 ல் சொல்லியுள்ளதன் பொருள் வாதிகளுக்கு PR Sakthivel Raja Land Owner YES PEE KAY Agency என்ற பெயரில் காசோலையை அனுப்பிவிட்டதால் வாடகை பாக்கி இல்லை என்று சொல்லியுள்ளீர்களா என்று கேட்டால் நாங்கள் நில உரிமையாளர்களுக்கு அனுப்பிய காசோலையை அவர்கள் வாங்க மறுத்துவிட்டார்கள். பி.வா.சா.1, 4 முதல் 14 காசோலைகள் அனைத்தும் PR Sakthivel Raja Land Owner YES PEE KAY Agency என்ற பெயரில் தான் அனுப்பினோம் என்றால் சரிதான். PR Sakthivel Raja Land Owner YES PEE KAY Agency என்ற பெயரில் காசோலை அனுப்பியது தவறு என்று தான் அதை மறுத்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. அ.வ.எண்.102/2019 வழக்கு தாக்கல் செய்வதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே PR Sakthivel Raja Land Owner YES PEE KAY Agency என்ற பெயரில் எங்கள் நிறுவன அதிகாரிகள் அனுப்பிய காசோலையை அந்த காலகட்டத்திலேயே வாதிகள் வாங்க மறுத்து திரும்ப வந்துவிட்டது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 க்கு பின்னர் PR Sakthivel Raja Land Owner YES PEE KAY Agency என்ற பெயரில் காசோலைகள் அனுப்பி அதை வாதிகள் பெற்றுக்கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அப்போது பணியில் இருந்த அதிகாரிகளுக்கு தான் அது தெரியும் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. அ.வ.எண்.102/2019 வழக்கில் எங்கள் நிறுவனம் ஆஜரான பின்னரும் PR Sakthivel Raja Land Owner YES PEE KAY Agency என்ற பெயரில்

பி.வா.சா.ஆ.5 முதல் பி.வா.சா.ஆ.14 வரையிலான காசோலை அனுப்பப்பட்டது என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தில் வாதிகள் கிரையம் பெற்ற விபரம் எங்கள் நிறுவன அதிகாரிகளுக்கு 31.12.2013 ல் அனுப்பிய அறிவிப்பின் மூலம் வாதிகள் மற்றும் SBI அனுப்பிய கடிதம் மூலமாக தெரியும் என்றும், வழக்கிடை சொத்தில் SARFACI Act மூலம் ஏலத்திற்கு கொண்டு வந்து வழக்கிடை சொத்தில் முன் உரிமையாளர்களுக்கு வழக்கிடை சொத்தில் எந்தவித உரிமையும் இல்லை என்பது நன்றாக தெரிந்திருந்தும் வாதிகளுக்கு கொடுக்க வேண்டிய வாடகையை கொடுக்காமல் வேண்டுமென்றே வாடகை செலுத்துவதில் பிரதிவாதிகள் தவறுகை செய்து வந்திருக்கிறார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கிடை சொத்தின் முன்உரிமையாளர்களுக்கு ஏராளமான கடன்கள் ஏற்பட்டு திவாலாகிவிடும் நிலைக்கு வந்துவிட்டார்கள் என்பது 2013 லிலேயே தெரியும் என்றும், வாதிகளுக்கு கொடுக்க வேண்டிய வாடகையை கொடுக்காமல் வேண்டுமென்றே வாடகை செலுத்துவதில் பிரதிவாதிகள் தவறுகை செய்து வந்துள்ளார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. நான் பணிக்கு வந்த பின்னரும் பி.வா.சா.ஆ.14 ல் உள்ள காசோலை PR Sakthivel Raja Land Owner YES PEE KAY Agency என்ற பெயரில் தான் அனுப்பப்பட்டது என்றால் சரிதான். முதன்முதலில் எங்கள் நிறுவனத்தில் இருந்து எப்போது வாதிகளுக்கு வாடகை கொடுக்கப்பட்டது என்றால் எங்கள் அலுவலக கோப்புகளை பார்த்தால் தான் தெரியும். அந்த ஆவணங்களை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். 2013 ல் இருந்து வாதிக்கு வாடகை கொடுத்தது சம்மந்தமான ஆவணம் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன் என்றால் எங்களுக்கு தெரிய வந்த தேதியில் இருந்து நாங்கள் வாடகை

செலுத்தியதற்கான ஆவணங்களை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

(நேரமின்மை காரணமாக குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)